விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 08 இதழ் 43
யாழ்ப்பாணம் புதன்கிழமை 22-3-1995


## ★ சிங்கள, தமிழ், முஸ்லிம் தனித்துவம் பேணப்பட வேண்டும்-சந்திரிகா

(கொழும்பு]
''சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்களின் தனித்துவம் பேணப் படவேண்டும் அரசியல், கலாச் “ார சமூகத்திட்டங்கள் மூலம் நிர்வாகம் பரவலாக் கப்படவும் வேண்டும். ஐக்கிய மும் சமாதானமும் நிலவும் நாடு ஒன்றைச்கட்டியெழுப்ப இது போன்ற திட்டமொன்று மிகவும் அவசியம்''

(2ம் பக்கம் பார்க்க[

## வடபகுதி வருவதற்கு இரு அமைச்சர்கள் முயற்சி!

(கொழும்பு)
வடபகுதி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு இரு அமைச்சர்கள் தயார் நிலையிலிருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

வடக்கு புனரமைப்புக்கு பொறுப்பான விசேட ஜனாதிபதி செயலணிக்குழுவின் தலைவரான பொது நிர்வாக மாகாணசபைகள் பெருந்தோட்டத்துறை பாராளுமன்ற விவகார அமைச்ச

(4ம் பக்கம் பார்க்க)

# அரசு சரியான சூழ்நிலையை ஏற்படுத்தாவிட்டால்
# எம்மைப் பாதுகாக்கக்கூடிய உறுதியான முடிவு எடுப்போம்!

## - பி. பி. ஸி.க்கு தமிழ்ச்செல்வன் பேட்டி -

[லண்டன்]
எமது தலைவர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் அரசாங்கம் ஒரு சரியான சூழ்நிலையை ஏற்படுத்தாவிட்டால் நாங்கள் உறுதியான நிரந்தரமான, கௌரவமான, எமது மக்களின் அபிலாசைகளை பாதுகாக்ககூடிய தீர்வொன்றை நோக்கி ஒரு இறுதியான முடிவு எடுக்கவேண்டிவரும்'' என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு, சு. ப. தமிழ்ச்செல்வன் பி' பி.ஸி. க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்'

## மக்களின் நலன் புறக்கணிப்பு

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: நாம் கடந்த நான்கு மாதங்களாக அரசாங்கத்துடள் பேச்சு வார்த்தை நடத்தினோம். அங்கு நாம் பேசிய விடயங்கள் முடிவு எடுத்த விடயங்களை அரசாங்கம் கருத்தில்

(4ம் பக்கம் பார்க்க)

## பேச்சு முறிவடையக காரணம்

தங்களுடைய அரசியல் ஸ்திரத்தைப் பலப்படுத்துவதற்கு எமது மக்களின் பிரச்னைகளை அரசியல் ரீதியாகப் பயன்படுத்துவதை நாம் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இன்றைய பேச்சுக்களின் நேர்மையீனமான செயற்பாடுகளே இந்தப் பேச்சுக்கள் முறிவடையக்கூடிய சூழல் ஏற்பட்டதற்கான கார

(4ம் பக்கம் பார்க்க)

## நிரந்தர சமாதானமே முடிவு

எங்களுடைய மக்கள் நீண்ட காலமாகவே போரைச் சந்திருக்கிறார்கள் அவர்களுக்கு எல்லாவற்றையும்விட தங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் தங்களுக்கு பாதுகாப்பான உறுதியாக தீர்வைத்தான் தமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை விரும்புபவர் அல்ல

எங்களுடைய ஆயுதப் போராட்டம் என்பது எங்கள் மீது திணிக்கப்பட்ட ஒரு போராட்டமே தவிர நாங்கள் ஒரு யுத்தத்தை விரும்பி ஏற்றுக்கொண்டவர் அல்ல எங்களுடைய இனத்தினுடைய மக்களுடைய வாழ்க்கைகான போராட்டம் என்பதை சுட்டிகாட்ட விரும்புகிறேன், என்றும் அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார். -ரி

## மற்றொரு இரத்தக்களரிக்கு இடமில்லை சமாதானமுயற்சி தொடரும்

### — அமைசசர் பீரிஸ்

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அரசாங்கத்திற்குக் காலக்கெடு விதித்துள்ள போதிலும், தற்போதைய சமாதான முயற்சிகள் தொடரும் என்று நீதி, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ரூபவாஹினிக்கு நேற்று வழங்கிய

(4ம் பக்கம் பார்க்க)

ஆயர் கெனத் — உயங்கொட

## புலிகளுடனான சந்திப்பு குறித்து ஜனாதிபதிக்கு விளக்கம்

(கொழும்பு)
யாழ்ப்பாணம் சென்று திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் வண. கெனத் பெர்ணன்டோவும், பேராசிரியர் ஜெயதேவ உயங்கொடவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து, தாங்கள் யாழ்ப்பாணத்தில் கண்டறிந்த விபரங்களையும், விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளையும் எடுத்துக் கூறினார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பான விபரங்கள்

(4ம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி சந்திரிகா

## இந்தியா, பங்களாதேஷ் விஜயம்

(கொழும்பு)
ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்க, இம்மாத இறுதியில் இந்தியாவுக்கும், பங்களாதேஷுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

இந்தியா, பங்களாதேஷ் அரசுகளின் அழைப்பின்பேரில் அவர் இந்த விஜயங்களை

(4-ம் பக்கம் பார்க்க)

## தகவல் தரக் கோரிக்கை



மேலேயுள்ள படத்திலுள்ள நபர் சில மோசடிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். இவர் பற்றிய தகவல்கள் கிடைத்ததை அடுத்து விசாரணைக்காக வைத்திருக்கும் போது தப்பி ஓடிவிட்டார். இவர் பற்றிய தகவல்களை அறிந்தோர் அண்மையிலுள்ள விடுதலைப்புலிகள் முகாம்களிற்கோ அல்லது காவல் துறையினருக்கோ அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## வரி விளம்பரம்

ந. சுந்தரம்பிள்ளைக்கு கனடா நாடகப் பரிசு

நோர்வே நாட்டு நாடகப் பரிசுடன், கனடா நாடகப் பரிசையும் பெற்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில் இங்கிலாந்துக் கதை. (சி-1414)

கணக்காளர் தேவை

யாழ். நகரிலுள்ள தொழில் நிறுவனத்திற்கு சிறிய கணக்குப்பார்ப்பதற்கு பெண் கணக்காளர் தேவை. காலை 8 மணிக்கு முன் நேரில் வரவும். சாயி இல்லம் 68A. ஐயனார் கோவிலடி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (எ-4836)

# புலிகள் முன்வைத்த 4 கோரிக்கைகளையும் அரசு நிறைவேற்ற வேண்டும்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அரசிடம் முன்வைத்திருக்கும் நான்கு கோரிக்கைகளை நிறைவேற்றுவதென்பது அரசுக்கு பெரிய விடயமல்ல. இக்கோரிக்கைகள் வடக்கு-கிழக்கு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுடன் பின்னிப் பிணைந்தவை. எனவே மக்களின் நலனை கருத்தில் கொண்டு அரசு விடாப்பிடியான நிலைப்பாட்டை எடுக்காமல் தளர்வு காட்டி பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு மட்டு மாவட்ட எம். பியான திரு. ஜோசப் பரராஜசிங்கம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு-கிழக்கு மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள். அவர்களின் அபிலாஷைகளை அரசு நிறைவேற்ற வேண்டும். உண்ணாவிரதமிருந்த போர்க் கைதிகள் 16 பேரையும் புலிகள் விடுதலை செய்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இதற்கு பிரதியுபகாரமாக அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் உறுதி காட்ட வேண்டும் என்றார். —சி.

## இன்று

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அரசியல் துறையினரால் கடற்புலி கப்டன்வாமன் போசாக்கு பராமரிப்பு பூங்கா கெருடாவில் தொண்டமானாறில் இன்று புதன் மாலை 4-30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் சிறப்புரைகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## அரவம் தீண்டி மரணம்

(பண்டத்தரிப்பு)

பாம்புக்கடிக்கு ஆளான டாக்டர் ஒருவர் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இருபாலையை சேர்ந்த டாக்டர் சி தங்கவேலாயுதம் என்பவரே இவ்வாறு பாம்புக்கடிக்கு பலியானவராவார்.

இரவுவேளை வீட்டின் பின்புறத்திற்கு சென்றபோது இருட்டில் பாம்பு ஒன்று திடீரென இவரைக் கடித்துவிட்டு சென்றதாகவும் மயக்கமடைந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டதாகவும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இவர் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 72

# சகல முகாம்களிலும் படையினர் தயாராகவே உள்ளனர்

— ஜெரி கூறுகிறார்

(கொழும்பு)

முன்னர் ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தின்போது விடுதலைப் புலிகள் சடுதியாக தாக்குதலை மேற்கொண்டு தங்கள் பலத்தை அதிகரித்துக் கொண்டனர். ஆனால் தற்போது பாதுகாப்பு படையினர், காவல் நிலையங்களில் தயாராகவே உள்ளனர், பேச்சு வார்த்தை தோல்வியுறும் பட்சத்தில் போருக்கும் தயாராகவுள்ளனர்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை பயன்படுத்தி புலிகள் கிழக்கு மாகாணத்தில் தம்மை பலப்படுத்தி வருகின்றார்கள். ராணுவம் இச்செயல்களில் பின்னடையாது என ரொயிற்றர் செய்தியாளர், இராணுவ தளபதி ஜெரி டி. சில்வாவை கேட்டபோது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சமாதானத்திற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் அதற்கு பொறுமையும் சகிப்புத்தன்மையும் அவசியம். ஒருவரை ஒருவர் நம்பாவிடில் சமாதானம் ஏற்படுத்த இயலாது.

புலிகள் கிழக்கில் தங்களை பலப்படுத்திக் கொள்ள எரிபொருட்கள் மற்றும் பொருட்களை சேகரிக்கின்றனர். அரசியல் மற்றும் போராட்டத்திற்கேற்ப செயற்பட்டு கிழக்கில கூடுதலானோர் கூடுகின்றனர். இது எம்மை குழப்பத்தில் ஆழ்த்துகிறது.

எனினும் எமக்கு சமாதானமே வேண்டும் பேச்சுவார்த்தை சமாதானத்தில் முடிய வேண்டுமென்பதே படையினரின் விருப்பமுமாகும்.

நாம் 11 வருடங்களாக போராளிகளுடன் மோதலில் ஈடுபட்டிருந்தோம். மீண்டும் போர் தொடங்கினால் ராணுவத் தீர்வு சாத்தியமில்லை. இருதரப்பினரும் போரால் சலிப்படைந்து விட்டனர்.

நடந்த போர்களால் 30 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

எனினும் இந்த முறை நாம் எதற்கும் தயாராகவே உள்ளோம். முன்னைய காலத்தைப் போல் முன்னணியிலுள்ள தாக்குதல் நிலைகளை இழக்க விரும்பவில்லை தற்போது நிலைகொண்டுள்ள இடங்களை தக்கவைத்திருக்கவே வேண்டும் என அரசுக்கும் வலியுறுத்தியுள்ளோம என்றும் அவர் மேலும் கூறினார்

கே-சி

## மண்டேலாவுக்கு பாராட்டு

(லண்டன்)

கடந்த 48 வருடங்களின் பின்பு பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணியார் நேற்று முதல் முறையாக தென். ஆபிரிக்கா நாடாளுமன்றத்தில் உரையாற்றினர்.

தென். ஆபிரிக்கா இனத் துவேஷத்தைக் கைவிட்டது ஒரு அதிசயம்தான் எனக் கூறிய மகாராணியார் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவையும் முன்னாள் ஜனாதிபதி எவ். டபிள்யூ. கிளார்க்கையும் பாராட்டி உரையாற்றினர். -வி-இ

# மொராஜி தேசாய் ஆஸ்பத்திரியில் அனுமதி

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமரான மொரார்ஜி தேசாய் பம்பாய் மருத்துவமனை ஒன்றில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

இருதய வியாதி காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவரது உடல நிலை குறித்து சரியான தகவல் எதனையும் மருத்துவபீட வட்டாரங்கள் வெளியிடவில்லை.

அண்மையில் இவர் தனது நூறாவது பிறந்ததினத்தை கொண்டாடியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. -க

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-03-22

புதன் இரவு

8-02 குயிலோசை - நிகழ்ச்சியில் ர. பகீரதி எழுதிய 'தாய்மனசு' கிராமிய நிகழ்வு
8-20 வாத்திய கானங்கள்
8-30 செய்திகள்
8-40 நாடகம்-பலரன்னை எழுதிய 'பயம்' என்பன இடம்பெறும்,

1995-03-23

வியாழன் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 விடுதலைக கீதங்கள்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 விடுதலைகீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-03-22

புதன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 படப்பாடல்கள்
5-30 அறிவூற்று
6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

கிரிக்கெட்

# சலீம் மாலிக்மீதான தடை நீக்கம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன சலீம் மாலிக் கிரிக்கெட் ஆடக்கூடாது என விதிக்கப்பட்ட தடையை விலக்கிக்கொள்ளப் போவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

சலீம்மாலீக் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியினருக்கு லஞ்சம் கொடுக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டையடுத்து மேற்படி தடை விதிக்கப்பட்டதாகவும், எனினும் அவர் மீதான வழக்கு முடியும் வரை சலீம்மாலீக் குற்றவாளியல்ல என கட்டுப்பாட்டுச் சபை முடிவு செய்துள்ளதால் குறிப்பிட்ட தடையுத்தரவை விலக்கிக்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. -க-சி

யாழ். மாவட்ட

அரச ஓய்வூதியர் சங்கம்

பதிவு இல. 183

மேற்படி சங்கம் 484, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றது என்பதை அறியத் தருகின்றோம்.

ச. இ. சண்முகரத்தினம், தலைவர்.

க. சி. நமசிவாயம், செயலாளர் (சி-1419)

விற்பனையாகிறது!

அறிவுக் களஞ்சியம் - 30

(எ-4834)

## சிங்கள, தமிழ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காகுமாரதுங்கா கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற இனப்பிரச்சினையில்-அரசாங்க மொழிக் கொள்கை என்ற பொருள் பற்றிய கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறினார்.

ஜனாதிபதி இங்கு மேலும் உரையாற்றுகையில்; ''விடுதலைப்புலிகள் தனிநாட்டுக்கு பதிலாக அதிகாரப்பரவலாக்கலை ஏற்றுக்கொள்ளத் தயார் என்று கடந்த பல மாதங்களாகத் தெரிவித்து வருகின்றார்கள். இக்கருத்து உண்மையில் செயல்வடிவம் பெற வேண்டுமானால் அரசாங்கம் மொழிப்பற்றுடன் நாட்டின் சகலதுறைகளிலும் அதிகார பரவலாக்கல் கொள்கையை விசுவாசமாக அமுல் செய்ய வேண்டும்.

இந்த முக்கியமான நடைமுறை பாடசாலை மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும். இதன் அடிப்படையில், இனஐக்கியத்தை ஒரு விசேட பாடமாகக் கற்பிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து மொழிப்பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்து வருகின்றது இதற்கு ஒரு தீர்வாக 1957ம் ஆண்டில் சிங்கள மொழிச் சட்டத்துடன் தமிழ் மொழி நியாயமான உபயோகம் என்ற சட்டமும் கொண்டு வரப்பட்டது. ஆனால் இத்திட்டம் அன்றிலிருந்து இன்றுவரை நிறைவுசெய்யப்படாமலேஇருந்துவருகின்றது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் 4ம் சரத்தில் இந்த உரிமை தெளிவாக குறிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தை அமுல்செய்வதில் ஏற்பட்ட ஒழுங்கீனங்களினால் பல்வேறு சமூகங்கள் தத்தமது தனிப்பட்ட அடையாளங்களை நிலைநாட்ட அனுமதிக்கப்படவில்லை. தற்போதைய அரசாங்கம் இந்தநாட்டில் வாழும் அனைத்து சமூகத்தினரையும் ஐக்கியப்படுத்துவதில் தெட்டத் தெளிவான கொள்கையொன்றைப் பின்பற்றி வருகின்றது'' என்று கூறினார். (வி-ரி)

## [illegible]

(யாழ்ப்பாணம்)

மண்வெட்டி தேவையான யாழ் விவசாயிகள் தங்கள் பெயர்களை நல்லூர் கமநல சேவை நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மண்வெட்டிகளை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனம் ஐம்பது சதவீதமான முற்பணம் தருமாறு கமநலசேவை நிலையத்திடம் கோரியுள்ளது என்றும் இதனால் விவசாயிகள் முற்பணம் கொடுத்து தங்கள் தேவைகளை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ம இ

யாழ்ப்பாணம் நல்லூர் நூலகம்

## மணிவாக்கு

பையில் உள்ளகாசை எப்படிச் செலவழிப்பது என்பதைவிட அதை எப்படிச் சம்பாதித்தோம் என்று நினைத்துப்பார்.

- டென்மார்க் பழமொழி

# கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழர் பரவலாக கைது

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பரவலாக கைது செய்யப்படுவது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

எவ்வித காரணமும் இன்றி பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்படும் இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுவதாகவும் மேலும் அறியப்படுகிறது.

சிறையிலிருக்கும் மேற்படி இளைஞர், யுவதிகள் வெளியுலகுடன் தொடர்பு கொள்ளவோ அல்லது தமதுநிலைமை குறித்துசட்டரீதியான அணுகுமுறைகளை மேற்கொள்ளவோ முடியாத நிலையில் அல்லல்படுவதாகவும் அறியப்படுகிறது.

கடந்த ஆட்சிக்காலத்தில் தாராளமாக இடம் பெற்ற இந்நடவடிக்கை தற்போதைய அரசாங்கம் பதவியேற்ற சில காலம் நிறுத்தப்பட்டு மீண்டும் ஆரமபிக்கப்பட்டமை குறித்து பலரும் கவலைதெரிவிக்கின்றனர். க-சி

# இராசி பலன்

22-3-1995

புதன்கிழமை

**(தமிழுக்கு பங்குனி-08)**

ஷஷ்டி முன்னிரவு 8-03 வரை அனுஷம் பிற்பகல் 2-47 வரை அமிர்த சித்த யோகம் இராகுகாலம் பகல் 12-17 முதல் 1-47 வரை சுப வேளை மாலை 4-47 முதல் 6-17 வரை.

மேடம்: கண்ணியக் குறைவு. காரியதாமதம். அலைச்சல்.

இடபம், சாதனை மிகுதி, நற்பெயர், பணவரவு.

மிதுனம்: பெரியோர் ஆசி தொழில் சிறப்பு. பயணம்.

கடகம்: பிடிவாதம், உடல் நாம் பாதிப்பு, மனச்சுமை.

சிங்கம்: கடிந்து கொள்ளல், வாக்குப்பகை' சுபச்செலவு.

கன்னி: தொழில் லாபம், சுபகாரியம். மகிழ்ச்சி.

துலாம்: துயர நினைவு, கோபவார்த்தை, கடன் படல்.

விருச்சிகம்; அதிகார சிறப்பு தானதர்மம், பாராட்டு.

தனுசு: விதண்டவாதம், குடும்பபிரிவு, பதட்டம்.

மகரம்: காரியசித்தி, விருந்தினர் வருகை, தெய்வீக செலவு.

கும்பம்; கலந்துரையாடல், கன்னியர் உறவு தியாகம்.

மீனம், எதிர்பாராத துன்பம், வேதனைப்படல், முயற்சி தோல்வி.

— ஜோஸ்யர்

## நமது நோக்கு

### மனித உரிமை மீறல்கள்

மனித உரிமை மீறல்கள்பற்றிய விசாரணைகள் நடைபெறும்போது, சாட்சியமளிக்க முன்வருபவர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படவேண்டியது அரசின் கடமை என்பதைச் சர்வதேச மனித உரிமைகள் நிறுவனம் அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.

மேற்கு நாடுகள் உதவி வழங்கு முன், மனித உரிமை மீறல்கள்பற்றிய அறிக்கைகளிலும் கவனம் செலுத்துகின்றன.

பொதுசன முன்னணி பதவியேற்றபின் மனித உரிமை மீறல்கள் விஷயத்தில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு வருகின்றது என்ற தோற்றம் உருவாக்கப்பட்டது.

விசாரணைக் குழுக்கள் பல அமைகக்கப்பட்டன. முன்னைய அரசுக் காலத்தில் நடைபெற்ற இராணுவக் கொடூரங்கள் விசாரிக்கப்பட்டு, மக்களுக்குப் பாதுகாப்பு உணர்வு வளர்க்கப்படும் என்ற எண்ணம் உருவானது.

ஆனால் - அந்தக் குழுக்களின் விசாரணைகள் வெறும் கண்துடைப்பாக அமையக் கூடாது.

இதுபற்றிச் சர்வதேச நிறுவனம் அக்கறைகாட்டி வருவது வரவேற்கத்தக்கதே!

ஏனெனில் - இராணுவத்தின் போக்கிலே மாற்றங்கள் தெரிகின்றதா?

சோதனை நடவடிக்கைகளும், சுற்றிவளைப்புகளும், கைது செய்தலும் தொடருகின்றன.

இந்தப் பின்னணியில் - மக்கள் பயமின்றி, சுதந்திரமாகக் குழுக்கள் முன்சென்று சாட்சியமளிக்க முன்வருவார்களா? சுயமாகக் கருத்துக்களை முன்வைப்பார்களா?

அரசே படையினருக்கு ஊக்கம் அளிக்கும் வகையிற் பேசுவதும், படையினர் தயவோடு சில காரியங்களைச் செய்து முடித்துவிடலாம் என எண்ணுவதும் தொடர்ந்தால, மனித உரிமை மீறல்களைத் தடுப்பவர் யார்?

ஐ. நா. சபையின் பிரகடனங்கள் சிலவற்றில் இலங்கை அரசு இன்னும் கையெழுத்திடவில்லை என்று சுட்டிக்காட்டப்படும் இவ்வேளையில், சர்வதேச நிறுவனங்களின் கண்காணிப்புத் தொடரவேண்டியது அவசியமே!

# சீக்கிய தீவிரவாதிகளுடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு

[சென்னை]

சீக்கிய தீவிரவாகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்பு உண்டா என்பதுபற்றி இந்திய பொலிசார் விசாரணை நடத்திவருகிறார்கள்.

சென்னை மத்திய சிறையில் இருந்து அண்மையில் தப்பிச் சென்ற விடுதலைப் புலிகள் அறுவரை தேடும்பணி மிகத் தீவிரமாக நடைபெற்றுவரும் வேளையில் இவ்வாறான சந்தேகம் பொலிசாருக்கு எழுந்துள்ளது.

ராஜஸ்தாண் மாநில அஜ்மீரின் புறநகர் பகுதியில் காலிஸ்தான் தனிநாடுகோரி போராடும் சீக்கிய தீவிரவகதிகள் தங்கிபிருந்த ஒரு வீட்டை பொலிசார் சோதனைபோட்ட போது அங்கு ஏ கே 47 ரகதுப்பாக்கிகள், ஆர். டி. எக்ஸ் வெடிமருந்துகள், துப்பாக்கி ரவைகள் மற்றும் நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அவற்றை பொலிசார் பறிமுதல செய்தனர்.

அந்த வீட்டில் இருந்து சில ரகசிய கடிதங்களையும் பொலிசார் கைப்பற்றினர். அவை அங்கிருந்த தீவிரவாதிகளுக்கும் சென்னையிலுள்ள இலங்கைத் தமிழ் பெண எனக் கருதப்படும் ஒருவருக்குமிடையில் பரிமாறப்பட்ட கடிதங்கள் என பொலிசார் கூறுகின்றனர்,

மேலும் அங்குள்ள வைசாலி நகரில் சீக்கிய தீவிரவாதிகள் தங்கியிருந்த ஒரு வீட்டில் தமிழ் அமைப்பைச் சேர்ந்த மூத்த தலைவர் ஒருவர் சமீபகாலம் தங்கியிருந்ததாகவும் பொலிஸ் விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

மேற்கண்ட காரணங்களினலசீககியதீவிரவாதிகளுக்கும விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடர்பு இருககலாம் என்று பொலிசாருககு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது பற்றி தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகிறது. சி

# நிவாரணத்திற்கு பதிலாக இனி பணம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வன்செயல் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு தமது சொந்த மற்றும் ஜீவனோபாய உரிமைகளை இழந்து தவிக்கும் அகதிகளுக்கு இனிமேல் பணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக புனர்வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சு அறிவித்துள்ளது.

அகதிகளுக்கு இதுவரையில் நிவாரணமாக அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களே வழங்கப்படடு வந்தன. இது நிறுத்தப்பட்டு பணம் வழங்கப்படுமானால் அதனால் அகதிகள் பல பிரசனைகளை எதிர்நோக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்படுவர் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முன்பும் நிவாரணப் பொருட்களை நிறுத்தி பணமாக வழங்குவதென புனர்வாழ்வு அமைச்சு தீர்மானித்த போது அதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதையடுத்து அந்த முடிவு கைவிடப்பட்டதும் தெரிந்ததே, —க-சி

# அரசை கவிழ்க்க ஐ. தே. க. சதியாம்

(கொழும்பு)

''ஐக்கிய தேசியக்கட்சி பொ. ச. மு. அரசாங்கத்தை கவிழ்க்கும் சதி முயற்சியில் தற்போது ஈடுபட்டுவருகிறது. இம் முயற்சியை வெற்றிகரமாக முறியடித்து அக்கட்சியினர் தலையெடுக்காதவாறு மக்கள் மனங்களை வென்றெடுப்போம்''

இவ்வாறு இளைஞர் விவகார விவகார விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஜீவன்குமாரதுங்க மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிகிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் நடைபெற்று முடிந்த தேர்தலில் அரசு அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் ஒரேயடியாக நிறைவேற்றிவிடமுடியாது. முடிந்தவற்றை நிறைவேற்றிவருகிறோம்.

இன்னும் ஓரிரு மாதங்களில் வட-கிழக்கில் நிரந்தர அமைதிகிட்டும். அரசு மிகவிரைவில் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்து பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுஒன்றைக்காணும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் உட்பட பலரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். க-சி

## இன்று

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியலாலய இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று 22ம் திகதி பி. ப. 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிநர் அ. நடராசா தலைமையில் நடைபெறும்.

# ஸ்ரீமானி தலைமையில் புதிய கட்சி உதயம்

(கொழும்பு)

திருமதி சிறிமானி அத்துலத்முதலி, ஜனநாயக ஐக்கிய தேசிய லலித் முன்னணி என்ற பெயரில புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்காவுக்கு இந்த புதிய கட்சியை பதியுமாறு அறிவிப்பு விடப்பட்டுள்ளது. இக்கட்சி பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் ஒருஅங்கமாக இயங்கும்.

போக்குவரத்து அமைச்சர் திருமதி சிறிமானி அத்துலத்முதலி தலைவராகவும், திரு. டி. எம். பி. நாணயக்கார காரியதரிசியாகவும் செயற்படுவர். ஏனைய 5 நாடாளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் பி. ஜி பி. கலுகல்ல, மொன்றே கோபல்லவ எதிரிவீர பிரேமரத்ன, ரவி கருணாநாயக்க, லால் குணசேகர ஆகிரியார் உதவி தலைவர்களாகவும்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புறுவை சின்னமாக ஒதுக்குமாறும் இக்கட்சி கேட்டுள்ளது. —கே-சி

## தெய்வீக இலக்கிய பேருரை

[அரியாலை]

திருநெல்வேலி கிழக்கு ஆடியபாதம் வீதி சிவஞானப் பிள்ளையார் ஆலயத்தில் வருடாந்த அலங்கார உற்சவத்தை யொட்டி கடந்த 20ம் திகதி திங்கள் முதல் இரவு 7-15 மணி முதல் 8-15 மணிவைர 'மகாபாரதம்' பற்றி தமிழருவி த. சிவகுமாரன் தெய்வீக, இலக்கிய பேருரை நிகழ்த்திவருகின்றார். எதிர் வரும் 29ம் திகதிவரை இப் பேருரை நடைபெறும். 59

## பலதும் பத்தும்

### எருமைப்பால்

மேற்கு நாடுகளில் எருமைகள் இல்லை. ஆனல்... இந்தியா போன்ற நாடுகளில் எருமைப்பால்தான் அதிகம். தசை வளர்ச்சிக்குரிய கொழுப்புச் சத்து அதிகமாக இருப்பதாற் பசும் பாலை விடத் தடிப்பாக உள்ளது. அதனாற் செரிப்பதும் சற்றுக் கடினம் தான்!

அறிவுத் தொழிலில் உழைப்போர்க்குப் பசும் பாலும் உடலுழைப்பில் ஈடுபடுவோருக்கு எருமைப் பாலும் சிறந்த உணவுகள். கோல்ப், மல்யுத்தம் போன்றவற்றில் ஈடுபடுவோர் எருமைப்பாலை விரும்புகிறார்களாம். அவர்களின் தசைக்கட்டைப் பார்த்தாலே புரியுமல்லவா?

நோயால் மெலிந்தவர்களும், சளிபிடித்தவர்களும் பருத்த உடலுடையவர்களும்' வயது போனவர்களும் இதனைப் பருகக் கூடாதாம். ஒவ்வாமையால் துன்பப்படக் கூடும்!

— மயூரன்

## தவக்கால நற்சிந்தனை

''நீ உன்னையும் உன் ஆன்மாவையும் கவனமாய்க் காக்கக்கடவாய்''

(உப:4.9)

உலகப் பற்று உலகப் பொருளில் உள்ள பாசம் எம்மை ஆன்ம பற்றையும் பாசத்தையும் மறக்கச் செய்கிறது. இதனால் அவர் கூறுகிறார். ''ஊசியின்காதில் ஒட்டகம் நுழைந்தாலும்' பணக்காரன் மோட்சம் சேரமாட்டான்'' என்று, அழியாத ஆன்மாவைக் காக்க நாம் முயலவேண்டும் அதுவே நோக்காக வேண்டும்.

— தா. மைதிலி

மரத்தை நட்டால் - நல் வளத்தைப் பெறலாம்

# "வடக்கு-கிழக்கை நிபந்தனையின்றி இணைப்பதை நாம் எதிர்க்கிறோம்"

## அமைச்சர் அஷ்ரப்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களை நிபந்தனையின்றி இணைப்பதை நாம் எதிர்க்கிறோம். நிபந்தனையின்றி இரு மாகாணங்களும் இணைக்கப்பட்டால் அது கிழக்கு மாகாண முஸ்லிம்களை அரசியலிலிருந்து ஒதுங்கிவிடச் செய்துவிடும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் 'சண்டேரைம்ஸ்'க்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் கூறியதாவது:

தற்போது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 33 வீதமாக உள்ளனர் வடக்கு-கிழக்கை இணைத்தால் முஸ்லிம்களின் விகிதாசாரம் 17ஆக கீழ் இறங்கிவிடும் இணைப்பு ஏற்படுமாயின் முஸ்லிம்களின் அரசியல் முக்கியத்துவம் கீழிறங்கி அவர்களின் அரசியல் அந்தஸ்தும் இழகக நேரிடும்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் தான் முஸ்லிம்கள் அரசியலில் பலமாக உள்ளனர் அதனை இழக்க நாம்விரும்பவில்லை, கிழக்கு மாகாணமே முஸ்லிம்களின் முதுகெலும்பாகஉள்ளது எனவே நிபந்தனையின்றி வடக்கு கிழக்கு இணைப்பு என்பது, அந்த முதுகெலும்பை உடைத்து முஸ்லிம் சமூகத்தை நிரந்தரமாக இயங்காமல் செய்துவிடும் என முஸ்லிம் காங்கிரஸ் கருதுகிறது.

விடுதலைப் புலிகள் சமாதான முயற்சியை உடைக்கப்பார்க்கிறார்கள் என்று நான் கூற மாட்டேன். தற்போது ஒரு சமாதானம் ஏற்படுத்தும் வாய்ப்பு கிட்டியுள்ளது. அதை நாம் நன்கு பயன்படுத்தவேண்டும்.

சமஷ்டி முறையான தீர்வு பற்றி தற்போது பேசப்படுகிறது. இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு சமஷ்டி முறை தான் சர்வரோக நிவாரணி என்பதற்கு உத்தரவாதம் இல்லை. சமஷ்டி முறையை கொண்டுவந்த அரசுகள் பல பிரச்னைகளை எதிர்கொள்கின்றன. இந்தியா, அமெரிக்கா அதற்கு உதாரணம் அதே நேரம் ஐக்கிய அரசுகள் அல்லது ஒற்றையாட்சி சட்டவாக்க அரசுகள் குறைந்த பிரச்னைகளை கொண்டிருக்கின்றன.

எனது கருத்துப்படி புதிய பாதையை காணவேண்டும் சுதந்திரமான புதிய வழி முறையை ஏற்படுத்தவேண்டும். நாம் புதிய சட்டவாக்கத்தை அமைத்து அதனை எந்த விதமாகவும் அழைக்கலாம் எனவும் மேலும் கூறினார். (கே-ரி)

# பொலிஸ் நிலையம் முன்பாக கத்தோலிக்க மதகுரு மீது கடுமையான தாக்கு

## வென்னப்புவயில் சம்பவம்

[கொழும்பு)

வென்னப்புவ பொலிஸ் நிலையம் முன்பாக கத்தோலிக்கக் குருவானவர் ஒருவரும் அவருடன் சென்ற கடற்றொழிலாளர்களும் இனந்தெரியாதவர்களால் நேற்று முன்தினம் தாக்கப்பட்டனர்.

இதில் மூவர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கத்தோலிக்க மதகுரு மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பெருமளவு கத்தோலிக்க மக்கள் வாழும் வென்னப்புவ பகுதியில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டதையடுத்து அப்பகுதி மக்கள் கொதிப்படைந்து காணப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-ரி)

ஜனாதிபதி
(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ள இருக்கிறார்,

இம்மாதம் 24ம் திகதி முதல் 28ம் திகதி வரை இந்தியாவுக்கும், 28ம் திகதி முதல் 30ம் திகதி வரை பங்களாதேஷுக்கும் விஜயம் செய்ய இருக்கும் ஜனாதிபதி, இரு நாட்டுத் தலைவர்களுடனும் இரு தரப்பு விவகாரங்கள் பிராந்திய ஒத்துழைப்புப் போன்ற விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார். -ரி

# ஒரு லட்சம் இராணுவத்தை எதிர்த்து புலிகள் 12 வருடங்களாக தமது தாயகத்தைக் காக்கிறார்கள்

## பிரிட்டன் பத்திரிகை புகழாரம்

(லண்டன்)

விமானப்படை கடற்படை உதவியோடு கிட்டத்தட்ட ஒரு லட்சம் ராணுவத்தால் அடிக்கடி நடத்தப்படும் தாக்குதல்களை எதிர்த்து கடந்த 12 வருடங்களாக விடுதலைப் புலிகள் தங்கள் பிரதேசத்தைக்காப்பாற்றி வருகிறார்கள் என பிரிட்டனின் 'இன்டிபென்டன்ற்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகளினதும் தமிழர்களினதும் இழப்பு அளப்பரியது என்றாலும் வீணானதல்ல ஏனெனில் தமழீழம் என்ற பெயரில் அவர்கள் தங்களுக்கென ஒரு தாயகத்தை அமைத்துக் கொண்டு விட்டார்கள்.

நீண்ட உள்நாட்டுப்போர்களையும் பிரிவினை யுத்தங்களையும் சந்திக்கும் உலகின் கண்களுக்கு தமிழர்களின் இப்போராட்டம் குறிப்பிடக்கூடிய அளவிற்கு சக்தி வாய்ந்ததும் பயனளிப்பதுமாகவுமே உள்ளது.

இப்போராட்டத்துக்கு தலைமைதாங்கும் பிரபாகரன் பல வருட போராட்டத்தின் அனுபவ முதிர்ச்சியால் இன்று மா ஓ சேதுங், சேக்குவேரா ஆகிய போராளித் தலைவர்களுக்கு இணையாக இருக்கிறார் எனவும் அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி)

நிரந்தர
[1ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள் எமது மக்களும் நாமும் ஒரு சமாதானத்தைத் காண எதிர்பார்க்கிறோம். ஆனல இன்று இங்கு ஆயிரக்கணக்கான மக்களும் ஆயிரக்கணக்கான போராளிகளுடைய தியாகங்களும் எதைக்குறிப்பிடுகின்றன என்றால் எங்களுக்கு ஒரு கௌரவமான பாதுகாப்பை வழங்கக் கூடிய ஒரு தீர்வுதான் அவசியமாக இருக்கின்றது. அது புறக்கணிக்கப்படும் பட்சத்தில் மீண்டும் எமது மக்கள் உறுதியான சில முடிவுகள் எடுத்து ஒருநிரந்தர சமாதானத்தை நோக்கிசில முடிவுகளை எடுப்பார்கள்.

### கேரள முதல்வர் தெரிவு

(திருவனந்தபுரம்)

கேரளா மாநிலத்தின் முதலமைச்சராக முன்னாள் மத்திய அமைச்சர் ஏ. கே. அன்ரனி நேற்று ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

இவரின் பெயரை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாகரன் முன்மொழிய திரு. பத்மராஜா வழிமொழிந்தார். (வி-ரி)

# புலிகள் யேசுவை போன்ற தியாகிகள்

(யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகள் யேசு கிறிஸ்துவைப் போல் ஒரு மாபெரும் இலட்சியத்திற்காக தம்மை அர்ப்பணித்த தியாகிகளேயாவர் என்று பிரிட்டன் இன்டிபென்டற் பத்திரிகைக்கு யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க குரு முதல்வர் தெரிவித்தார்.

இப்பத்திரிகையின் நிருபர் ஒருவர் குரு முதல்வரைச் சந்தித்து விடுதலைப்புலிகள் பற்றி கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ரி)

மற்றொரு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டியில் தெரிவித்துள்ளார்

அப்பேட்டியில் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவிக்துள்ளதாவது: தலைவர் பிரபாகரனின் கோரிகைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் சில கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தடைசெய்யப்பட்ட பொருட்கள், மீன்பிடித்தடை போன்ற விடயங்களில் சில பிரச்னைகள் எழுந்திருக்கின்றன. இத்தகைய பிரச்னைகளை மிக இலகுவாக ஒரே நாளில் தீர்த்து வைக்கமுடியாது.

காலத்திற்குக் காலம் பிரச்னைகள் எழக்கூடும். ஆனல் நாம் எமது முயற்சிகளைக் கைவிடப் போவதில்லை,

சமாதான முயற்சிகள் தொடர்வதால், இந்தப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளமுடியும் என்பதில் அரசாங்கத்திற்கு நம்பிக்கை இருக்கிறது.

சமாதான முயற்சிகளைச் சரியான வழியில் முன்னெடுத்துச் செல்வதால் அதனைச் சாதிக்க முடியும் என்பதில் தங்களுக்கு நம்பிக்கை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மற்றுமொரு இரத்தக்களரியைத் தவிர்க்கலாம் என்ற உறுதிமொழியைத் தரமுடியுமா? என அமைச்சரிடம் வினவப்பட்டது. அதற்கு ஆம் எனப் பதிலளித்த அமைச்சர், இது போன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டைகளை நாம் எதிர்பார்க்கவேண்டும் எனக் கூறினார். அது இயல்பானது; தவிர்க்க முடியாதது. இது பற்றி மனம் தளரவேண்டிய அவசியம் இல்லை. நாம் நிச்சயமாக எமது சமாதான முயற்சிகளைக் கைவிடவில்லை என்றார். -ரி

பல்கலைக்கழக

# விரிவுரையாளர்கள் நேற்று வேலைநிறுத்தம்

[கொழும்பு]

பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மேற்கொண்ட அடையாள வேலைநிறுத்தம் ஒன்றினால் நேற்று தெற்கு பல்கலைக்கழகம் இயங்கமுடியாமல் போனதாக செய்திகள் தெரிவித்தன.

பத்துசத வீத சம்பள அதிகரிப்பு கோரியே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

தென்பகுதி பல்கலைக் கழகங்கள் இயங்கமுடியாது போனதால் சில பல்கலைக் கழகங்களின் பரீட்சைகளைக் கூட ஒத்திப்போடவேண்டிய நிலைஏற்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [இ.

# காமினியின் கொலைக்கு உடன் விசாரணை தேவை

## ரணில் கோரிக்கை

(கொழும்பு)

காமினி திஸாநாயக்காவின் கொலை சம்பந்தமாக உடன் விசாரணை ஒன்றை மேற்கொண்டு அறிக்கை வெளியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்கா கேட்டுள்ளார்.

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் இவர் இது சம்பந்தமான தமது கோரிக்கையையும் சமர்ப்பித்துள்ளார்.

காலஞ்சென்ற காமினிதிஸாநாயக்காவின் 53வது பிறந்த தினத்தை நினைவு கூருமுகமாக கொழும்பில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொள்ள வந்திருந்த சமயம் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் திரு. ரணில் விக்கிரமசிங்கா தமது கோரிக்கையை வெளியிட்டார், இ.ரி

# ராமதாஸை விடுவிக்க கோரி ஆதரவாளர் கொந்தளிப்பு

## பஸ்கள் தீமூட்டி எரிப்பு

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸ் பொலிசாரால் கைது செய்யப்பட்டதினால் தமிழ் நாட்டில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

டாக்டர் ராமதாஸை உடனடியாக விடுதலை செய்யக் கோரி அக்கட்சியின் ஆதரவாளர்கள் பல இடங்களில் அரச பஸ்களுக்கும். தனியார் வாகனங்களுக்கும் தீவைத்துக் கொளுத்தியுள்ளனர்.

இதுவரை பத்து அரச பஸ்களும் ஐந்து தனியார் வாகனங்களும் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வி-ரி

ஆயர் கெனத்
1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லையாயினும், யாழ். நிலைமை குறித்து ஆயர் கெனத் பெர்னன்டோவும், பேராசிரியர் உயங்கொடவும் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. -ரி

மக்களின் நலன்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்காது, தன்னிச்சையாக எமது மக்களின் நலன்களைப் புறக்கணித்து, தனது செயற்பாடுகளைச் செயற்படுத்தி வருகின்றது.

பேச்சு முறிவடையக்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணமாகும்.

மூன்று கட்டங்களாகப் பேச்சு நடத்தியும், நான்கு மாதங்களாக அமைதிச் சூழ்நிலை நிலவிவருகின்ற காலத்தில் ஐ. தே. க. ஆட்சியில் எமது மக்கள் எந்த நெருக்கடிக்குள் இருந்தார்களோ, அதேயளவு நெருக்கடிகளை, இன்றும் எமது மக்கள் எந்தவிதப் பாகுபாடுகளும் இன்றிச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள்,

வடபகுதி வருவதற்கு
[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரான ரத்னசிறி விக்கிரமநாயக்கவும், கூட்டுறவு உள்ளூராட்சி சுதேச வைத்தியத்துறை அமைச்சரான அமரசிறி தொடங்கொடவுமே யாழ் செல்வதற்கு காத்திருக்கிறார்கள்.

வடபகுதிக்குச் செல்லுமாறு ஜனாதிபதி என்னைக் கேட்டுள்ளார். அங்கு செல்வதற்காக விடுதலைப்புலிகளுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன் என்று அமைச்சர் விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-